மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இப்போது நெரிசல் பகுதிகளில் மட்டும் சீரணித் தொண்டர்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள். குறிப்பாக 50 இடங்களில் அவர்கள் பயன்படுத்தப்படு கிறார்கள். அதை மேலும் 25 இடங்களுக்கு கூடுதலாக்கும் யோசனை போக்குவரத்துத் துறையின் பரிசீலனையில் உள்ளது.

சென்னை-போந்தவாக்கம் பேரூந்துகள்

*352 வினா—திரு கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வழித்தடம் எண் 113 (சென்னை-போந்தவாக்கம்) பேரூந்துகளை தேர்வாய் வரை சென்று திரும்புமாறு செய்வதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : வழித்தடம் எண் 113-A (தங்கசாலை-போந்தவாக்கம்) செல்லும் பேரூந்துகள் 19—6—1972 முதல் காலையில் ஒரு முறையும் மாலையில் ஒரு முறையும் தேர்வாய் கிராமம் வழியாகத் திருப்பிவிடப்பட்டுள்ளன.

திரு கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த 113-A பேரூந்து கள் காலையில் ஒரு முறையும், மாலையில் ஒரு முறையும் தான் தேர்வாய் கிராமம் வழியாகச் செல்லவேண்டுமா ? அந்த வழியே செல்லும் எல்லாப் பேரூந்துகளையும் தேர்வாய் கிராமம் சென்று வருவதற்கு உடனடியாக அரசு ஆணைப் பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : போதுமான பயணிகள் இருப் பார்களேயானால் அதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்கும்.

Temple Lands in Madras

*353. *Q.*—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether lands of the temples at Madras City have been given to the State Slum Clearance Board ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) ஒரு விவரப் பட்டியல் [a]அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, ஏழைகளுக்கு வீடுகள் கட்டித் தருவதற்காக குடிசை மாற்று வாரியத்திற்கு தரப்பட்ட நிலங்கள் மிகவும் குறைந்த விலைக்குத் தரப்பட்டதாகச் சொல்கிறார்களே, அது அரசுக்குத் தெரியுமா ?

---

[a]526—527-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.